**இலங்கை ஹதபிம அதிகாரசபை – 2015**

----------------------------------------------------------------

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபையின்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2. நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

----------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (ஹரித தனவ் பிம் அபிவிருத்தி மத்திய அதிகாரசபையின்) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

அதிகாரசபையால் விவசாய நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக செலுத்திய வட்டியான ரூபா 21,550 செலவினமாக குறிப்பிடப்படாமல் வட்டி வருமானங்களிலிருந்து ஈடுசெய்து நிதிசார் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் ரூபா 5,531,800 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

அரச வருமானத்தைக் கணக்கீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 36,625,000 மூலதன மானியம் நிதிசார் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு ஊழியர்சேமலாப நிதிய செலவினம் ரூபா 59,241 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

விற்பனை நிலையங்களில் பராமரிக்கப்பட்டிருந்த மாதாந்த பொழிப்பு பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பவற்றிற்கிடையே கொள்வனவு, விற்பனை மற்றும் மற்றும் விரயங்களின் பெறுமதி முறையே ரூபா 7,334,298, ரூபா 738,245 மற்றும் ரூபா 187,448 ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

அதிகார சபையின் விற்பனைப் பிரிவின் ஊழியர் சேமலாப நிதிய செலவினம் ரூபா 849,817 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் 855,916 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 தொங்கல் கணக்கு

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் இனங்காணப்படாத "பதவியணியினர் கடன் இணக்கம்" கணக்கிலான ரூபா 50,998 ஆன மீதி சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 179,125 தொகையான 25 பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையில் சேவை புரிந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 244,034 தொகையான கடன் மற்றும் கடன் வட்டித் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 190,767 தொகையான 21 கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 21 ஆண்டுகளுக்கு முன்னர் சேவை முடிவுறுத்தப்பட்ட களஞ்சிய காப்பாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 13,874 ஊழியர் பிணை வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) | நிதிப் பிரமாணம் 139(4), 264 மற்றும் 267 | 32 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,684,786 கூட்டுத்தொகையான மேலதிகநேரப் படிகள், சம்பளம், கட்டுநிதி, இடர் கடன், முற்பணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுக்காக உறுதிச் சீட்டுக்களில் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதாக கையொப்பமிட்டோ அல்லது பற்றுச்சீட்டுக்களோ பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 139(7), 262(2) மற்றும் 262(3) | 16 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 597,892 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களில் “கொடுப்பனவு செய்யப்பட்டது” என்ற முத்திரை இடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 272 (3) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உரிய மாதம் முடிவடைந்து 06 வாரங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 172,545 கூட்டுத்தொகையான கொடுப்பனவு களுக்குரிய 08 உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 396 (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 115,563 தொகையான 12 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நிதிப் பிரமாணம் 571 | 2016 யூலை 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 160,637 கூட்டுத்தொகையான 10 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிதிப் பிரமாணம் 770 மற்றும் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 438 | ரூபா 147,900 கிரயமுடைய சிறிய உழவு இயந்திரமொன்று கைதவிர்க்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 798,108 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,653,927 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,855,819 ஆன நலிவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் திறைசேரி மானியம் (மீண்டெழும்) ரூபா 10,360,830 ஆல் அதிகரித்திருந்த போதிலும், மூலதன மானியங்கள் ரூபா 21,492,163 ஆல் குறைவடைந்தமை மற்றும் ஊழியர் ஊதியம் ரூபா 7,981,198 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 6,419,554 தொகையான மிகை, 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 32,601,898 ஆன பற்றாக்குறையாக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை மீண்டும் மிகையாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 35,556,330 ஆன பங்களிப்பு பல்வேறு மாற்றங்களுடன் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 63,733,824 ஆக இருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராகவும் அதிகாரசபையாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

06 ஊழியர்களால் அவர்களின் சேவை முடிவுறத்தப்பட்டமை தொடர்பாக மீண்டும் வேலை கோரி அதிகாரசபைக்கு எதிராக 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையின் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமையால் ரூபா 502,582 தொகையொன்றை அறவிடுவதற்காக முன்னாள் ஊழியரொருவருக்கு எதிராக அதிகாரசபையால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

(அ) விவசாய பல்வகைப்படுத்தல், கிராமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் முழுமையான தொடர்புடைய நீர் முகாமைத்துவம் தொடர்பாக திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக தேவையெனக் கருதும் அனைத்து நடவடிக்கைகளையும் செயற்படுத்துதல், அமைச்சரால் காலத்திற்கு காலம் நிச்சயிக்கப்படுகின்ற பிரதேசங்களில் கூட்டுத்தாபனத்தினால் அல்லது அரசினால் அல்லது அரசல்லாத முகவர் நிறுவனமொன்றின் மூலமோ அத்திட்டங்களை ஒருங்கிணைத்தலும் செயற்படுத்தலும்.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட அனைத்துக் காணிகள், உயர் விளைச்சல், சுற்றாடலைப் பாதுகாத்தல், காணி மற்றும் நீர் வளங்களை பாதுகாத்தலும் மக்கள் கிராமங்களது அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அவற்றை முகாமைத்துவமிடல்.

(இ) விவசாய உற்பத்திகளை தயார்படுத்தலும் விற்பனை செய்தலும்.

(ஈ) விவசாய பல்வகைப்படுத்தல், மற்றும் மக்கள் கிராம அபிவிருத்திக்காக இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல், அவற்றைப் பராமரித்தலும் செயற்படுத்தலும்.

மேற்குறித்த நோக்கங்களின் கீழ் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட காணிகளில் உயர்ந்த விளைச்சல் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கொத்மலே மற்றும் பள்ளேகல விவசாயப் பண்ணைகளில் முறையே ரூபா 219,381, ரூபா 1,326,128 என நட்டத்தை ஈட்டியிருந்தன.

**4.2 முகாமைத்துவ செயறபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்த 02 மோட்டார் சைக்கிள்களையும் உழவு இயந்திரமொன்றையும் கைதவிர்ப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் வரையிலும் அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 900,000 கிரயமுடைய லொறி வண்டி அதிகாரசபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 முறையாக கையேற்கப்படாத சொத்துக்கள்**

அதிகாரசபையால் 02 வாகனங்களும் 02 கட்டிடங்களும் 02 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் முறையாக கையேற்கப்படாதிருந்ததுடன் கையேற்கப்படாத 02 காணிகளில் நிர்மாணங்களிற்காக ரூபா 2,655,149 செலவிடப்பட்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைத் தாமதமாக அனுப்பிய காரணத்தினால் ரூபா 18,387 ஆன தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பொருட்கள் கொள்வனவு செய்யப்படாமல் முன்னைய ஆண்டின் போது ரூபா 944,997 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 794,767 தொகையுமாக மொத்தம் ரூபா 1,739,764 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேலும் அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து ரூபா 1,164,764 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹதபிம அதிகாரசபையின் 11 ஊழியர் வகைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 93 ஆகிய போதும் உள்ளவாறான பதவியணியினர் 57 ஆகையால் இருந்தமையால் வெற்றிடங்கள் 36 ஆக இருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1. உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக போதியளவு பதவியணியினர் ஆர்சேர்ப்புச் செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகளுக்கு இடையே 29 சதவீதம் முதல் 45 வரை குறிப்பிடத்தக்க விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 5.3 ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படாமை

அதிகாரசபையின் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,094,280 தொகையொன்று தொடர்பாக 2010 ஆண்டின் போது நடைபெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்டு அதனைத் தீர்வு செய்வதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதனைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| (அ) கணக்கீடு | நாட்குறிப்பு பதிவுகள் கணக்காளரால் அங்கீகரிக்கப்படாமை. |
| (ஆ) விற்பனை பிரிவு | விவசாயப் பொருட்களை களஞ்சியத்தில் பொறுப்பேற்றல், இருப்புக்களை விநியோகித்தல், மெய்மையாய்வு செய்தல், இருப்பு விரயங்களை சீராக்குதல் மற்றும் விறிபனைப் பிரிவின் கடமைக் கையளிப்பு போன்ற குறைபாடுகள் காணப்படாமை |